பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 11 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- G20 உச்சிமாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பது, உலகின் நீடித்த வளம் மற்றும் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு. சூர்யகாந்த் இன்று பதவியேற்கிறார்.
- தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணைய அதிகாரிகள் இன்று ஆய்வு செய்ய உள்ளனர்.
- கனமழை காரணமாக திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் கல்வி நிறுவனங்களுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.
- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்கில் நடைபெற்ற G20 உச்சிமாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டிருப்பது, உலகின் நீடித்த வளம் மற்றும் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தமது தென்னாப்பிரிக்க பயணம் குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தியதற்காக தென்னாப்பிரிக்க அதிபர் திரு. Cyril Ramaphosa மற்றும் அந்நாட்டு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ளார்.

இந்த மாநாட்டின் இடையே இத்தாலி பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இருதரப்பு ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது தென்னாப்பிரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்பட்டார்.

<<<<>>>>

உச்சநீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக திரு.சூர்யகாந்த் இன்று பதவியேற்கிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி.திரௌபதி முர்மு, அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

இதுவரை இப்பொறுப்பை வகித்த திரு.பி.ஆர்.கவாய், நேற்றுடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து, திரு.சூர்யகாந்த் இப்பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

2027-ம் ஆண்டு பிப்ரவரி 9-ந் தேதி வரை அவர் தலைமை நீதிபதியாக பொறுப்பு வகிப்பார்.

தலைமை நீதிபதி பதவியேற்பு விழாவில், முதன்முறையாக வெளிநாடுகளைச் சேர்ந்த தலைமை நீதிபதிகள் மற்றும் நீதிபதிகளும் பங்கேற்கின்றனர்.

பூடான், கென்யா, மலேசியா, மொரீசியஸ், நேபாளம், இலங்கையைச் சேர்ந்த நீதிபதிகள் குழு பங்கேற்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணைய அதிகாரிகள் ஆய்வு செய்ய உள்ளனர்.

இதுகுறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்னாயக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேர்தல் ஆணையத்தின் ஊடகப் பிரிவு அதிகாரி திரு. பவன் மற்றும் துணை இயக்குநர் திரு. தேவன்ஷ் திவாரி ஆகியோர், சென்னையில் இன்று முதல் 3 நாட்களுக்கு இப்பணிகள் குறித்த ஊடக ஒருங்கிணைப்பு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆய்வு செய்ய உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் கள ஆய்விலும் ஈடுபட இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் தேர்தல் ஆணையத்தின் இயக்குநர் திரு. கிருஷ்ணகுமார் திவாரி, மாவட்ட அளவில் நடைபெறும் கணக்கீட்டுப் படிவங்கள் வினியோகம் மற்றும் டிஜிட்டல்மயமாக்கல் குறித்து ஆய்வு செய்ய உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையத்தின் செயலாளர் திரு. மதுசூதன் குப்தா, சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை கள ஆய்வு செய்ய இருப்பதாகவும் திருமதி அர்ச்சனா பட்னாயக் கூறியுள்ளார்.

<<<<>>>>

அந்தமான் கடற்பகுதியில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் இன்று இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நேற்றுமுதல் கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கும், தூத்துக்குடி, ராமநாதபுரம், திருச்சி, கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, விருதுநகர், மயிலாடுதுறை மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்ழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் இன்று நடைபெற இருந்த பருவத் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ராமேஸ்வரத்திலிருந்து - சென்னைக்கு, வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட உள்ளதாக, தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

அம்ரித்பாரத் திட்டத்தின்கீழ், ராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய தெற்கு ரயில்வேயின் மதுரைக் கோட்ட மேலாளர் திரு.ஓம் பிரகாஷ் மீனா, இதுபற்றிய அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றார்.

பாம்பன்புதிய ரயில் பாலத்தில் ஏற்பட்ட பழுது முழுமையாக சரி செய்யப்பட்டு, தற்போது 50 கிலோமீட்டர்வேகத்தில் ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ராமேஸ்வரம்அருகேயுள்ள லாந்தை பகுதியில் ரயில்வே மேம்பாலம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாககூறிய கோட்ட மேலாளர், நிலம் கையகப்படுத்தும் பணி இன்னும் 20 நாட்களில் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

**<<<<>>>>**

நீலகிரிமாவட்டம், முதுமலை புலிகள் காப்பகத்தில், 2026-ம் ஆண்டுக்கான புலிகள் கணக்கெடுக்கும்பணி நாளை தொடங்க உள்ளது.

இந்தப்பணியில் ஈடுபடும் முன்களப் பணியாளர்களுக்கான பயிற்சி முகாம், தெப்பக்காடு வன உயிரினமேலாண்மை பயிற்சி மையத்தில் இன்று நடைபெற உள்ளதாக, எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யா-யுக்ரைன் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டு வருவது குறித்து ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Marco Rubio தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஈரான் மற்றும் பாகிஸ்தானிலிருந்து நேற்று ஒரே நாளில், 11 ஆயிரத்திற்கும் அதிகமான ஆப்கானிஸ்தான் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ஆறாவது சர்வதேச வேளாண் அறிவியல் மாநாட்டை மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

இந்திய வங்கிகள், கடந்த 14-ந் தேதியுடன் முடிவடைந்த இருவார காலத்தில், சேமிப்புப் பத்திரங்கள் வாயிலாக, சுமார் 55 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தொகை திரட்டியுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் நைலான், மாஞ்சா கயிறு விற்பனையை தடுக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அம்மாநில சட்ட மேலவை துணைத்தலைவர் திருமதி Neelam Gorhe வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

ஒடிசா மாநிலம் சுந்தர்கர் பகுதியில், வெளிமாநில கொள்ளை கும்பலைச் சேர்ந்த 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

சென்னை மாநகரில், இதுவரை 77 ஆயிரத்து எழுநூற்று ஏழு செல்லப் பிராணிகளின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 33 ஆயிரத்து 418 செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக, மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோயில் கார்த்திகை தீபத் திருவிழாவிற்கான முன்னேற்பாடுகளை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்தனர்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் சேரன்குளம் அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோவிலில், கார்த்திகை மாதத்தை முன்னிட்டு நடைபெற்ற சகஸ்ர தீப அலங்கார சேவையில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வழிபாடு செய்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்க உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

கே.எல். ராகுல் தலைமையிலான இந்த அணியில் ரோஹித் ஷர்மா, விராட் கோலி, குல்தீப் யாதவ் உட்பட 15 பேர் இடம்பெற்றுள்ளனர்.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் முதலாவது ஆட்டம் வரும் 30ஆம் தேதி ராஞ்சியில் நடைபெற உள்ளது.

<<<<>>>>

ருமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா, அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<>>>>**